*Intervention 2006, Volume 4, Number 3, Page 290 - 292*

# Summaries in Tamil

**ஆயுதக் களைவு, படையிலிருந்து விலகல், மற்றும் சிறுவர் போளாளிகளின் மீழிணைப்பு: சேரா லியோனின் சமூக மற்றும் உளவியல் உருமாற்றம்.**

இக் கட்டுரை சேரா லியேதனில் ஆயுதக் களைவு, படையிலிருந்து விலகல் மற்றும் சிறுவர் போளாளிகளின் மீழிணைப்பு என்பனவற்றின் நடைமுறையைச் சுருக்கமாகத் தருகிறது. மற்ற நாடுகளைப்போல் அல்லாது சேரா லியோனில் பெருந்தொகையான சமூக அமைப்புகள், சங்கங்கள், மற்றும் அரசாங்கமும் இணைந்த பதிலளிப்புக் காணப்படுகிறது. சமூக மற்றும் குடும்ப மீழிணைப்பில் பங்கு வகித்ததாக 9 இடையீடுகள் இனம்காணப்பட்டுள்ளன: சமூக உணர்வூட்டல், சம்பிரதாய ரீதியான ஆயுதக் களைவு, படையிலிருந்து விலகல், ஐஊஊ யில் மாற்றத்திற்காகக் குறிப்பிட்ட காலம், குடும்பங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் மத்தியஸ்தம், குடும்ப மீழ் ஒன்றிணைவு, பாரம்பரிய தூய்மையாக்கல், குணமாக்கல் சடங்குகள் மற்றும் சமய ஆதரவு, திறமை விருத்திப் பயிற்சி அல்லது பாடசாலை, பாடசாலையில் அல்லது பயிற்சியிலிருப்பவர்களுக்குத் தொடர் மருத்துவ வசதி, தனிப்பட்ட ரீதியில் உள ஆற்றுப்படுத்தல், இலகுபடுத்தல் மற்றும் ஊக்கம் என்பன ஆகும். படையிலிருந்து விலகிய பல சிறுவர்கள் ஏனைய சிறுவரைப்போல் சமூகத்தில் நன்கு செயற்படுவதைக் காண முடிகிறது.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் போராளிகள், சேரா லியோன், மீழிணைத்தல்

**யுத்தத்தின் காயங்களை சுத்திகரித்தல்: சேரா லியோனின் பாரம்பரிய குணமாக்கல், உளசமூக நலன் மற்றும் மீழிணைத்தல் பற்றிய ஓர் விசாரணை.**

போராட்டக் குழுக்களுடன் தொடர்புபட்ட சிறார்களை மீழிணைத்தலில் பாரம்பரிய குணப்படுத்தல் சடங்குகள் முக்கிய இடத்தை வகித்து வந்துள்ளன. சேரா லியோனில் கற்பளிக்கப்பட்ட பெண் பிள்ளைப் போராளிகளுக்கான பாரம்பரிய தூய்மையாக்கல் சடங்குகளின் விளைவுகள் பற்றிய தரம் சார் ஆய்வின் முடிவுகளை விபரிக்கிறது. இச் சடங்குகள் எவ்வாறு உளசமூகக் குணமாக்கலுக்கும் மீழிணைத்லுக்கும் வழிவகுத்தன? தரவுகளிலுருந்து ஒன்றோடொன்று தொடர்புள்ள இருவிடையங்கள் வெளிப்பட்டன. முதலாவது, இச் சடங்குகள் அடையாள ரீதியிலான சமூக இணக்கப்பாட்டைக் காட்டுகின்றது. இங்கு அப் பெண் பிள்ளையும் சமூகமும் குறிப்பிட்ட பாத்திரங்களை ஏற்று தமது இணக்கப்பாட்டை வெளிப்படுத்துவர். இரண்டாவது, அப் பெண் தனது கறைகளைக் களைவதுடன் யுத்தம் விட்டுச் சென்ற துரதிஷ்டம், சமூகத்திற்கெதிரான நடத்தை, மறை சுய கணிப்பு யாவற்றையும் களைந்துவிட சடங்குகள் உதவுகின்றன. இவ் விரண்டு விடையங்களும் இப் பெண் பிள்ளைகளின் உளசமூக நலனையும் மீழிணைப்பையும் இலகுபடுத்தியுள்ளன.

**முக்கிய சொற்பதங்கள்:** உளசமூகக் குணமாக்கல், பெண் பிள்ளை, தூய்மையாக்கல், இணக்கப்பாடு, மீழிணைத்தல், சேரா லியோன்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**வளர்ந்த பெண் பிள்ளைகள் மற்றும் இளம் பெண்களின் மீழிணைப்பு**

அனைத்து பெண் போராளிகள் ஒரே விதத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. 14-25 வயதுப் பெண்களுக்கு தற்போதுள்ள ஆயுதக்களைவு, படையிலிருந்து விலகல் மற்றும் மீழிணைத்தல் (னுனுசு) திட்டங்கள் பொருந்தாது. நீண்ட கால விளைவை அளிக்கும் ஓர் முறையை ஏற்படுத்த முன், பெண்கள் ஏன் போராட்டத்தில் இணைகிறார்கள் என விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். இத்திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட முன், பெண்களின் கனவுகள், இயலுமைகள், ஆபத்து நிலைகள் விளங்கிக்கொள்ளப்பட வேண்டும்.

**முக்கிய சொற்கதங்கள்:** சிறுவர் போராளிகள், பெண் பிள்ளைப் போராளிகள், மீழிணைத்தல், லைபீரியா

---

**வட உகண்டாவின் முன்னைய சிறுவர் போராளிகள் மீழிணைப்பு: சிறுவர் நிறுவனங்களுடன் இணைக்கத்திற்கு வருதல் மற்றும் பொறுப்புபேற்றல்**

வட உகண்டாவில் கடத்திச் செல்லப்பட்ட சிறுவர்களை மீழிணைப்பது மிகவும் குறைந்த பலனையே தந்திருக்கிறது. இதற்கான காரணங்களைத் தேடுகிறது இக் கட்டுரை. இவர்களின் கொடுமையான கடந்நகாலத்தை எவ்வாறு கையாளுவது என்பது தொட்பாக ஓர் கிறிஸ்தவ அரச சார்பற்ற நிறுவனத்தின் அணுகுமுறைகளும் முன்னர் கடத்தப்பட்ட சிறுவர் போராள்கள், சமூக உறுப்பினரின் கருத்துக்களும் ஒப்பிடப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பாதங்கள்:** சிறுவர் போராளிகள், உளவியல் வடு, மீழிணைத்தல், உகண்டா, World Vision

**சிறுவர் போராளிகள் வளரும் போது என்ன நடைபொறுகிறது? மொசாம்பிக் சம்பவக் கற்கை**

முன்னைய சிறுவர் போராளிகளின் வாழ்க்கை வெளிப்பாடுகளைப் பற்றிய தேசாந்திரக் கற்கையின் கண்டுபிடிப்புகளைத் தருவதாக இப் பிரசுரம் அமைகிறது. மொசாம்பிக்கில் 1980-2004 இற்கிடையில் 39 முன்னைய ஆண் சிறுவர் போராளிகளிடம் தகவல்கள் திரட்டப்பட்டன. தரவுகளிற்கமைய 16 ஆண்டுகளின் பின்னர் இக் குழுவைச் சேர்ந்த பெரும்பாலான சிறவர் போராளிகள் வளமுள்ளவர்களாக, இயலுமை கொண்டவர்களாக, கரிசனையுள்ள வளர்ந்தோராக மாறியுள்ளனர். எனினும் இவர்களில் எவருமே முழுமையாகக் கடந்த காலத்திலிருந்து விடுபடவில்லை. அனைவருமே சிறுவர் போராட்ட அனுபவத்துடன் தொடர்புபட்ட அழுத்தத்தால் பாத ிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் உளவியல் பிரச்சினைகளுக்கு ஆட்படும் போது முற்று முழுதாகத் தம்மிலும் குடும்பத்தவர், நண்பர்களின் ஆதரவிலும் தங்கியிருக்கிறார்கள். மேலும் இக்கற்கையானது இவர்கள் உறுதியாகக் குணமடையவும் அவர்களின் மீழிணைப்பிற்கும் அவசியமாக இருந்த சில குறிப்பிட்ட இடையீடுகளையும் இனங்கண்டுள்ளது. தொழிற் பயிற்சி, சமூக உணர்வூட்டல், சமூகமட்ட செயற்றிட்டங்கள், பாரம்பரிய கலாசார சடங்குகளுக்கான வெளிப்புற ஆதரவு என்பவை முன்னைய சிறுவர் போராளிகளின் உறுதியான குணமடைதலுக்கு உதவிய சில நடவடிக்கைகள் ஆகும்.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் போராளிகள், சமூக உணர்வூட்டல், பிரச்சினைக்கு முகம் கொடுத்தல், மொசாம்பிக், மீழிணைத்தல், மனவடு.



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**முக்கியமான ஆராட்சி மற்றும் நடைமுறைகளில் ஏகமனதான முறையின் பயன்பாடு. போராட்டக் குழுக்களுடன் தொடர்புடைய சிறார்களுடனான இடையீடுகளின் அபிவிருத்தியில் உள்ள சந்தேகங்கள்**

தொழில் புரிபவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் முன்னைய சிறுவர் போராளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பாகப் பெருகிவரும் அனுபவமங்களிலிருந்து எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்? இந்தச் சுருக்கமான அறிக்கை, குறிப்பிட்ட துறையில் கைதேர்ந்தவர்களின் கருத்துக்களைக் கைப்பற்றுவதற்கான ஓர் உதாரணமாக ஏகமனதான முறையைக் காட்டியுள்ளது. இதன் பலனாக, சில ஆராட்சிகளுக்கான முன்னுரிமைத் துறைகளும், நடைமுறைகளின் அபிவிருத்தி முறைகளும் இனங்காணப்பட்டுள்ளன:- முன்னர் யுத்தக் குழுக்களுடன் தொடர்புகொண்டிருந்த பெண் பிள்ளைகளை மீழிணைத்தல், மேம்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு யுக்திகள் மற்றும் சமூக மட்டத்திலான உளசமூக, சிகிச்சை இடையீடுகளின் ஒப்பீட்டளவிலான செயற்றிறனை ஆவணப்படுத்தல் போன்றன ஆகும்.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் போராளிகள், ஏகமனதான முறை, மீழிணைத்தல்

---

**இலங்கையில் வன்முறையற்ற சமாதான இயக்கம்: முறைகளும் விளைவுகளும் (செப்டெம்பர் 2003- ஜனவரி 2006)**

செப்டெம்பர் 2003 முதல் வன்முறையற்ற சமாதான இயக்கமானது இலங்கையில் குடிமக்களின் பாதுகாப்பை அதிகரிக்க முயற்சி செய்து வருகிறது. இதனூடாக இலங்கையில் ஓர் நீடித்த நீதியுடனான சமாதானத்திற்குப் பங்களிக்க முடியும். மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவும் அதிகாரமுள்ளவர்களுடன் தொடர்புகொள்ளவும் வன்முறையற்ற சமாதான இயக்கம் உதவிவருகிறது. அத்துடன் தற்போது தொடரும் வன்முறைகளைக் குறைக்கவும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மேலதிக வன்முறைகளைத் தடுக்கவும் பங்களிப்பு மேற்கொண்டு வருகிறது. மேலும் வன்முறையற்ற சமாதான இயக்கம் ஏனைய அரச சார்பற்ற மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து சமாதானத்திற்கும் வன்முறையற்ற செயற்பாடுகளிலும் பங்களிக்கவும், உள்நாட்டுத் தலைவர்கள் சமாதானமான முறையில் முரண்பாடுகளைத் தீர்த்து வன்முறைகள் ஏற்படாது தடுக்கவும் உதவி செய்துள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** சமூக வன்முறை, சிறுவர் போராளிகள், இணைப்புகள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.